
# விநாயகர் அநுபூதி



கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுக - னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பக மெனவினை - கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன் மகன்
மற்பொரு திரள்புய - மதயானை
மத்தளவயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு - பணிவேனே

முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய - முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த - அதிதீர
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை - இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் - பெருமாளே

## காசிப முனிவர் அருளியது

உ

சிவமயம்



# விநாயகர் அநுபூதி

## (மூலமும் உரையும்)

## காசிப முனிவர் அருளியது

**நூற் சிறப்பு**

காசிப முனிவரால் அருளப்பட்ட இவ் விநாயகர் அநுபூதி இலகுவாக பாராயணம் செய்யக்கூடிய எளிய நடையிலும், பொருள் உணர்ந்து தாளக் கட்டுக்கு அமைவாகவும், இசையோடும் பாடுவதற்கும் சிறப்புடையதாகும்.

மேலும் இந் நூலை நாள்தோறும் பாராயணம் செய்பவர்கள் அத்தியாவசிய சிறப்புக்களான நூநலம் பெற்று சொல் வன்மை அடைந்து கீழ்மைப் பண்புகளை அழித்து முழுமுதலை உணர்ந்து பேரின்பம் பெறுதல் போன்ற வேண்டுதல்களையும் பெறுவர் என்பதில் சந்தேகமில்லை. எனவே விநாயக அடியார்களுக்கு இந் நூல் ஓர் வரப்பிரசாதமாகும்.

# விநாயகர் அநுபூதி

*(மூலமும் – உரையும்)*

### நாநலம் பெற

1. **பூவார் புனிதா! புவனத்தலைமைத்**
**தேவா! கரியின் சிரமே உளவா!**
**மூவாத் தமிழால் முறையே உனைஎன்**
**நாவால் புகழும் நலமே அருள்வாய்.**

பொழிப்பு:-

அழகு பொருந்தியவனே! ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் தலைவன் ஆனவனே! யானையின் முகத்தைக் கொண்டவனே! நான் உன்னைப் பழமையான தமிழால் புகழ்ந்து பாடும் வலிமையை எனக்கு அருள்வாய்!.

### சொல்வன்மை பெற

2. **வில்லாண் மையரும் விரிமா தமிழில்**
**வல்லாண் மையரும் வளமாய்ப் புகழும்**
**நல்லாண் மையது நனியே மிளிரும்**
**சொல்லாண் மைகொடு எந்துரியப் பொருளே!.**

பொழிப்பு:-

துரியப் பொருள் ஆனவனே! தோள் வலிமை மிக்கவரும், தமிழில் புலமை மிக்கவர்களும் உன்னைப் புகழ்வார்கள், அவ்வாறே நானும் உன்னைப் பாட சொல்வன்மையை எனக்குக் கொடுப்பாயாக!.

### கீழ்மைப் பண்புகள் அழிய

3. **காமா திகளாம் கயமைப் பிணிகள்**
**போமா (று) அருள்வாய் புரைதீர்த்து எனைஆள்**
**கோமா! கருணைக் குகனார் தமையா!**
**பூமா! பொலமார் புலவா! வருவாய்!.**

பொழிப்பு:-

தலைவனே! முருகனின் சகோதரனே! பூவுலகுக்குத் தலைவனே! ஞான வடிவான புலவனே! காமம், குரோதம், லோபம், மோகம் மதம், மாச்சரியம் என்னும் கீழ்தரமான பண்புகள் என் உள்ளத்திலிருந்து போகும்படி அருளி, என் குற்றம் தவிர்த்து, என்னை ஆட்கொள்ளுவாயாக!.

### முழு முதலை உணர

4. அத்தே வர்களும் அயன், மால் அரனும்
சுத்தாத் துவிதத் துறைநின் றவரும்
'கத்தா கரிமா முகத்தான்' எனவே
வித்தா ரமொடு விளம்பும் இறையே!.

பொழிப்பு:-

தேவர்கள், திருமால், நான்முகன், சிவபெருமான், சைவ சித்தாந்திகள் போன்றவர்களால் "வழிபடுவதற்கு உரிய முழுமுதற் கடவுள் விநாயகனே ஆவான்" என்று புகழப்படும் விநாயகனே!

### குருவாய் வந்து அருளுவான்

5. காவா எனைஐங் கரனே! மதுரப்
பாவா ணர்புகழ் பரமென் குருவே!
நீவா விரைவாய் நிமலன் புதல்வா!
தாவா கருணைத் தளிர்சே வடியே!.

பொழிப்பு:-

ஐந்து கைகளை உடையவனே! என்னைக் காப்பாய். இனிமையாகப் புலவர்களால் பாடப்படும் குருவே! தூய்மையான வடிவுடைய சிவபெருமானின் மைந்தனே! நீ வருவாயாக. குற்றமில்லாத கருணையைப் பொலியும் தளிர் போன்ற செம்மையான அடிகளை உடையவனே!.

### பேரின்பம் பெறுக

6. ஒருகொம் புடையான்; உயர்மோ தகமே
விரும்பும் பெருமான்; விடையோன் குமரன்
கரும்பார் தொடையன்; சுகமா குமெலாம்
அருள்வான்; அருள்வான்; அடியார் அவர்க்கே!.

பொழிப்பு:-

ஒற்றைக் கொம்பை உடையவன்; மோதகத்தை விரும்பும் பெருமான் சிவபெருமானின் மைந்தன்; வண்டுகள் மொய்க்கும் மாலையை உடையவன்; அடியவர்களுக்கு இன்பங்களை அருள்வான்.

### *விதியினால் வரும் வேதனை நீங்க*

7. **பேழ்வாய்ப் பெரியோன் பெரும்பூங் கழலைச்**
**சூழ்வார், பணிவார், துதிப்பார் அவர்க்கே**
**ஊழ்வே தனைதீர்த் (து) உளமே மகிழ**
**வாழ்வே தரும்வல் லபைநா தனரே!.**

பொழிப்பு:-

சிறப்புப் பொருந்திய வாயினை உடைய விநாயகனின் மலர் போன்ற திருவடிகளை அணுகுபவர், பணிந்து வணங்குபவர், புகழ்ந்து பாடுபவர் ஆகியவர்களின் முன்வினைப் பயனைத் தீர்த்து, நல்ல வாழ்வைத் தருபவன் வல்லபையின் நாதனே ஆவான்.

### *பேய், பூதம், பில்லி, சூனியங்களால் வரும் துன்பங்கள் அகல*

8. **பேய்பூ தமொடு பிலிசூ னியமும்,**
**பாய்வேங் கையதும் பரையின் அருமைச்**
**சேய்வா ரணனார் திருப்பேர் புகலப்**
**போய்மாய்ந் திடுமே புனிதம் வருமே!.**

பொழிப்பு:-

பராசக்தியின் புதல்வனாகிய விநாயகனது திருப் பெயரைச் சொல்பவருக்குப் பேய், பூதம், பில்லி, சூனியம் போன்றவற்றாலும், வேங்கை முதலிய விலங்குகளாலும் விளையும் தீமைகள் போகும், தூய்மையும் வந்தடையும்.

### *நல்ல புலமை பெற*

9. **பல்காப் பியங்கள் பகரும் திறமும்**
**ஒல்காப் புகழும், உயிர்செல் வமதும்**
**நல்காய் நலமாய்; நளின மலர்த்தாள்**
**செல்வா! திகழ்சித் திவிநா யகனே!.**

பொழிப்பு:-

அழகான மலர் போன்ற அடிகளை உடைய செல்வனே! சித்தி விநாயகனே! நான் பல்வகைக் காப்பியங்கள் இயற்றும் திறமையையும், அழியாத புகழையும், சிறந்த செல்வத்தையும் பெற அருள்வாய்!.

### சிறியவனும் அருள் பெற

10. பூந்தார் சூழல் வில் புருவம், தளிர்போல்
ஆந்தே கம்மிளிர் அணியார் இருவர்
சார்ந்தே விளங்கும் தனிமா முதலே!
தேர்ந்தே தொழுதேன் சிறியேற்(கு) அருளே!.

பொழிப்பு:-

மாலையை அணிந்த கூந்தலையும், வில் போன்ற புருவங்களையும், இளந்தளிர் போன்ற உடலினையும் பெற்றிருக்கும் சித்தி, புத்தி என்ற தேவிமார் இருவரையும் பெற்று எழுந்தருளியிருக்கும் ஒப்பில்லாத முதல்வனே! உன்னைத் தொழுதேன். சிறியவனாகிய எனக்கும் அருள் செய்வாயாக!

### புலன்களை அடக்க

11. வஞ்சப் புலனென் வசமாய் நிசமாய்க்
கொஞ்சிக் குலாவிக் குணமாய் மிளிர
எஞ்சித் தமதில் இனிதே உனது
கஞ்சக் கழல்வை கணநா யகனே!

பொழிப்பு:-

தேவர்களுக்கெல்லாம் தலைவனே! என்னை வஞ்சித்துத் தீய வழியில் சேர்க்கும் ஐம்புலன்களும் என் அறிவுக்கு உட்பட்டு நல்ல செயல்களைச் செய்பவையாய் மாறி ஒளி விடுவதற்கு, என் சித்தத்தில் உனது தாமரை போன்ற அடிகளை வைப்பாய்!.

### வறுமை நீங்கிச் செல்வம் பெறுக

12. பொல்லா வறுமை, புரைசால் கொடுநோய்
எல்லாம் ஒழித்தே எனைஆண் டிடவே
வல்லாய் வருவாய்; வளமே தருவாய்;
உல்லா சமிளிர் ஒருகை முகனே!

பொழிப்பு:-

அழகான துதிக்கையை உடையவனே! பாவங்களைச் செய்யத் தூண்டும் வறுமையையும், கொடிய நோய்கள் எல்லாவற்றையும் அழித்து என்னை ஆண்டு கொள்ள வல்லமை பெற்றவன் நீ ஒருவனே! எனக்கு வளங்களைத் தருவாய்.

### இப்பிறவிப் பயன் பெற்று வீடுபேறு பெற

13. மகத்தாய் அணுவாய், மதியாய்க், கதிராய்,
செகத்தாய், அறிவாய்த் திகழ்சாட் சியதாய்,
அகத்தும், புறத்தும் அகலாப் பொருளாய்,
இகத்தும் பரத்தும் இருக்கும் பரமே!.

பொழிப்பு:-

பெரிதாயும், அணுவாயும், சந்திரனாயும், சூரியனாயும், சகமாயும், அறிவாயும், நல்வினை தீவினைகளுக்குச் சாட்சியாயும், அகத்திலும் புறத்திலும் அகலாத பொருளாயும், இம்மைப் பயனாயும், மோட்சமாயும் திகழும் விநாயகனே!.

### நிறைந்த அருளைப் பெற

14. கருணைக் கடலைங் கரனே! கபிலர்க்(கு)
அருளே கொடுத்தாய் அபயம் அளித்தாய்!
தருவே அனையாய்! தமியன் தனைஆள்
குருவே பொறுமை குணநா யகனே!.

பொழிப்பு:-

கருணைக் கடலாகத் திகழும் ஐந்து கரத்தானே! கபிலருக்கு அருளைக் கொடுத்து, அடைக்கலம் தந்தாய். கற்பக மரம் போன்றவனே! தனியான என்னை ஆளும் குருவே! பொறுமை மிக்க குணங்களுக்கெல்லாம் தலைவனே!

### அருட்பாடல்கள் இயற்ற

15. கற்பார் இதயக் கமலத்(து) உறையும்
அற்பார் ஒளியே! அழகுஆ னைமுகா!
பொற்பாய் உனது பொலந்தாள் மலர்க்கே
நற்பா கொடுத்தேன் நனிஏற்(று) அருளே!.

பொழிப்பு:-

கற்பவர்கள் உள்ளத் தாமரையில் ஒளியாக எழுந்தருளுபவனே! அழகிய ஆனை முகத்தவனே! உன் பொன் போன்ற திருவடிகளுக்கு நல்ல பாமாலையை நான் கொடுத்தேன். இதை நீ ஏற்றுக் கொண்டு அருள் புரிவாயாக!.

### *செய்த பிழைகள் எல்லாம் தீர*

16. ஆற்றல் அறியேன் அடிசெய் பிழைதீர்
சீற்றம் தவிர்வாய் திகழ்சிற் பர! யான்
சாற்றும் தமிழ்மா லைதனைத் துதிக்கை
ஏற்றே அருள்வாய்! அருள்வாய் இனிதே.

பொழிப்பு:-

உன் கருணைத் திறம் அறியாத நான் உன் திருவடிகளில் செய்த பிழைகளைத் தீர்ப்பாய்! கோபம் தவிர்ப்பாய்; பரம்பொருளானவனே! நான் இயற்றிய தமிழ் மாலையை உனது துதிக்கையில் ஏற்று அருள்வாய்!.

### *எல்லாப் பிறவிகளிலும் இறை எண்ணம் பெருக*

17. எந்தப் பிறப்பை எடுத்தா லும்உனைச்
சொந்தத் தமிழால் துதிசெய் திடவே
கொந்தே அலர்தார்க் குழல்வல் லபையாள்!
சிந்தைக் (கு) உகந்தாய்! சிறப்பாய் அருளே!.

பொழிப்பு:-

மணம் வீசும் மலர் மாலைகளை அணிந்த வல்லபையின் மனத்திற்கு உகந்தவனே! நான் எந்த வகையான பிறப்பினை எடுத்தாலும் உன்னை என்னுடைய தமிழ்மொழியால் போற்றி வழிபட எனக்கு அருள் செய்வாய்.

### *பழைய பாவங்கள் தீர*

18. சிந்தா மணிதான் திகழ்மார் புடையாய்!
முந்தை வினையை முழுதும் தொலைத் (து) ஆள்
எந்தாய்! எளியேன் எனைநீ எழிலாய்
வந்துஆள்! உயர்ஓ வடிவப் பொருளே!.

பொழிப்பு:-

என் தந்தையே! பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்குபவனே! சிந்தாமணி விளக்கும் மார்பை உடையவனே! முற்பிறப்பு வினைகளை முழுதும் தொலைத்து எளியவனான எனக்கு முன் அழகாகத் தோன்றி வந்து ஆள்வாயாக!.

### வலிமை பெற

19. பகையார் அவர் முப் புரமே பொடியா
நகைசெய் தபிரான் நலமாம் கனியை
வகையாய் அருள வலம்வந் தவனே!
தகையாய்! திடம்நீ தருவாய் மணியே!

பொழிப்பு:-

முப்புரங்களையும் தன்னுடைய சிரிப்பினால் பொடிசெய்த சிவபெருமான், ஞானப்பழத்தை உனக்கே கொடுக்கும்படி, அவனையும், உமையம்மையையும் வலம் வந்தவனே! சிறந்த பண்பை உடையவனே! எனக்கு வலிமையை தந்தருள்வாய்.

### எல்லாச் செல்வங்களும் பெற

20. சீரோங் கிடும்: நல் திறமும் பெருகும்:
ஏரோங் கிடுமே: இனிதாம் திடமே
பேரோங் கிடும்:நல் பெரும்வே ழமுகன்
தாரோங் கடியைத் தொழுவார் தமக்கே!.

பொழிப்பு:-

யானை முக விநாயகனின் திருவடிகளைத் தொழுபவர்களுடைய புகழ் ஓங்கும்: நன்மைகள் பெருகும்: அழகு மிகும்: வலிமை மிகுதியாகும் என்பது உறுதி.

### குழந்தைப் பேறும் செல்வமும் பெற

21. மகப்பே(று) அருள்வான்: மகிழ்வாய் நிதியை
அகத்தே தருவான்: அணியன்: கரிமா
முகத்தான் அடியை முறையாய் நிறையாய்ச்
செகத்தீர் தொழுமின்! தொழுமின்! தினமே!.

பொழிப்பு:-

விநாயகன் குழந்தைப் பேற்றினை அருள்வான்: இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சியுடன் செல்வத்தைத் தருவான்: அவன் அருகிலேயே இருப்பான்; விநாயகனின் திருவடியை முறையாக நாள் தோறும் தொழுவீர்களாக.

### நவக்கிரகங்களும் நல்லருள் புரிய

22. பெருமைப் பரிதி, பிறை, இத் தரைசேய்,
அருமால், குருவே, அசுரர் குரவன்,
கருமை அரவு கள்இவை நலமாம்
ஒருகை முகன்பேர் உரைப்பார் அவர்க்கே!.

பொழிப்பு:-

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்களும், விநாயகருடைய திருப்பெயரை உச்சரித்தவர்களுக்கு எப்பொழுதும் நன்மைகளையே செய்யும்.

### மன அமைதி பெற

23. ஓடித் திரிவாய் உலகுஏ ழும்மிக
வாடித் திரிவாய் மனனே! தகுமோ
கூடிக் குலவா ஒருகோ டனைநீ
பாடிப் பணிவாய் பணிவாய் நலமே!.

பொழிப்பு:-

என் மனமே! அமைதியைத் தேடி ஏழு உலகங்களிலும் திரிந்தாய். இது உனக்கு பொருத்தமுடையது அன்று. ஒற்றைக் கொம்பை உடைய விநாயகனைக் கூடுவாய்! பாடிப் பணிவாய்!.

### பயமின்றி வாழ

24. ஏகாக் கரனை எழில்ஐங் கரனைப்
பூகாப் பவனைப், பொறுமைக் குணனை,
மாகா ளியவள் மகனை, மனனே!
நீகா எனவே நிதமும் பணியே!.

பொழிப்பு:-

மனமே ஓங்கார வடிவை உடையவனை, அழகிய ஐந்து கரங்களை உடையவனை, உலகைக் காப்பவனை, அடியார்கள் செய்யும் பிழைகளைப் பொறுப்பவனை, சக்தி மகனாகிய விநாயகனை அடைந்து, ‘நீ காப்பாய்!’ என்று நாள்தோறும் பணிவாயாக!.

### *நலங்கள் பல வந்து சேர*

25. **தேடிப் பணிவார் சிலபேர்: சிறப்பாய்**
**ஆடிப் பணிவார் சிலபேர்: அணியாய்ப்**
**பாடிப் பணிவார் சிலபேர்: அவரை**
**நாடித் தருவான் நலம்ஐ முகனே!**

பொழிப்பு:-

விநாயகப் பெருமானைச் சிலர் தலங்கள் தோறும் தேடிச் சென்று பணிவார்கள்: சில பேர் அவனைப் பாடி, ஆடிப் பணிவார்கள். சில பேர் கூட்டம் கூட்டமாய் கூடிப் பாடிப் பணிவார்கள். இவ்வாறு பத்தி செய்பவர்களைத் தேடிப் போய் விநாயகன் நலன்கள் பலவற்றைத் தருவான்.

### பகை நீங்க.

26. **துட்டர் குதர்க்கர் தொலைந்தே பொடியாய்ப்**
**பட்டே இரியப் படையை விடுவாய்!**
**சிட்டர் புகழும் திறமே! வளரும்**
**மட்டில் மதமார் மழலைக் களிறே!.**

பொழிப்பு:-

பொல்லாதவர்களும், முறையில்லாமல் வாதம் செய்பவர்களும் பொடிப் பொடியாகப் போகும்படி, தன் திருக்கரத்தில் உள்ள படைக்கலத்தை விடுபவனே! நல்லவர்கள் புகழும் உறுதிப் பொருளே! அளவில்லாமல் கருணையாகிய மதநீர் பொழியும் அழகிய விநாயகரே!.

### *இதமான வாழ்வு பெற.*

27. **விண்நீ: உடுநீ: மீளிர்வா யுவும்நீ:**
**மண்நீ: அனல்நீ: புனல்நீ: மதிநீ:**
**கண்நீ: மணிநீ: கவினார் ஒளிநீ:**
**எண்நீ: உனைஆள் இதம்செய் பவனே!.**

பொழிப்பு:-

வானும் நீ: அதில் விளங்கும் விண்மீன்களும் நீ: சந்திரனும் நீ: இவற்றைக் காணும் கண் நீ: கண்ணினுள் மணி நீ: அதில் ஒளிரும் ஒளி நீ: எண்ணப்படுகின்ற பொருள் நீ: என்னை ஆட்கொண்டு நன்மை செய்பவனே!.

*நல்ல வழியில் செல்ல.*

28. தீய நெறிநாத் திகத்தில் திளைத்தே
ஆய நெறியை அறியா திருந்தேன்
தூய நெறியின் தொடர்காட் டினைநீ
ஆயும் நெறியும் அறிவித் தனையே!

பொழிப்பு:-

விதி வசத்தால் நாத்திகத்தில் உழன்றேன்: உன் அருளைப் பெறும் சன்மார்க்க வழியை அறியாமல் காலம் கழித்தேன்: தூய்மையான பக்தி வழியைக் காட்டினாய்: நான் உய்யும் நல்ல வழியை அறிவித்தாய்.

*பிறவித் துன்பம் நீங்க.*

29. தொல்லைப் பிறவித் துயர்மா கடலுள்
அல்லல் வழியில் அழுந்தல் முறையோ?
செல்வா! பிரமச் செழுமா மணியே!
நல்லாய் கரைஏற் றிடும்ஐங் கரனே!

பொழிப்பு:-

நான் தொடர்ந்து வரும் பிறவியாகிய துன்பக் கடலில் மூழ்கி அழுந்திக் கிடப்பது முறையோ? செல்வனே! பிரமனும் போற்றும் மணியே! நன்மை புரிபவனே! என்னைக் கரை ஏற்றிடும் ஐந்து கரமுடையவனே!.

*அறியாமை அழிய*

30. மாயை எனும்கார்த் திரையைத் தெரித்துஎன்
பேயை விரட்டும் பெருமான் ஒருவன்:
தாயை நிகர்த்த தனிமா முதல்வன்:
காயைக் கனிஆக் குவன்கண் ணியனே!.

பொழிப்பு:-

உயர்ந்தவனே! நீ மாயை என்னும் கரிய திரையைக் கிழித்து, என் மனதில் தோன்றும் அச்சமாகிய பேயை விரட்டக் கூடிய பெருமான். தாயைப் போன்ற ஒப்பற்ற முதல்வனே! காயையும் கனி ஆக்குவது போல், பக்குவம் இல்லாத என்னையும் பக்குவப் படுத்துபவனே!.

### நன்மைகள் பெற

31. அயில்கை உளநம் அறுமா முகற்கே
மயிலூர் திதனை மகிழ்ந்தே அழித்தான்:
செயிர்தீர் அடியார் சிறப்பாம் வகையில்
ஒயிலாய் நலம்தந்(து) உயர்த்தும் அவனே.

பொழிப்பு:-

அடியார்கள் சிறப்படையும்படி நன்மைகளைச் செய்து, அவர்களை உயர்த்துபவன் விநாயகப் பெருமானே ஆவான். அவன் வேலைத் தாங்கிய முருகனுக்கு மயிலை வாகனமாக மகிழ்ந்து அளித்தான்.

### அர்ச்சித்து அருளைப் பெற.

**32. கரிமா முகனின் கருணை அறியார்
எரிவாய் நரகில் இடரே படுவார்:
விரிமா தவரும் விரும்பும் பெரியோன்
அரிதா அருச்சித்(து) அவனைப் புகழே.**

பொழிப்பு:-

யானை முகத்தவனின் கருணைத் திறத்தை அறியாதவர்கள் வெம்மையான நரகத்தில் துன்பப்படுவார்கள். தவத்தை விரும்பிச் செய்யும் தவசிகள் விரும்பும் விநாயகனை வழிபட்டு அவனைப் புகழுங்கள்.

### எண்வகைச் சித்திகளைப் பெற

**33. இருநான்(கு) அவதா னம்எண்சித் திகளும்
பெருமான் உமையின் பெரும்பிள் ளையவன்
தருவான்! தருவான்! தரவே விரைவாய்
வருவான்! வருவான்! வழுத்தாய் மனனே!.**

பொழிப்பு:-

உமையம்மையின் மைந்தனாகிய விநாயகன் எட்டு அவதானங்களையும், எட்டுச் சித்திகளையும் விரைவாக வந்து அருளுவான். அத்தகையவனை, மனமே! போற்றுவாயாக!

### பிரணவப் பொருளை உணர

34. கருமால் வினையைக் களைந்தே அருளும்
திருவைந் தெழுத்தும், திகழா றெழுத்தும்,
இருநான் கெழுத்தும் எமதுஐங் கரனார்
ஒருபேர் எழுத்தே: உணர்வாய் மனனே!.

பொழிப்பு:-

இரு வினைகளையும் போக்கும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்தும், நம: குமராய என்னும் ஆறெழுத்தும், ஓம் நமோநாராயணாய என்னும் எட்டெழுத்தும், விநாயகருக்குரிய ஓம் என்னும் ஒரே எழுத்தில் அடக்கம் என்பதை, மனமே! உணர்வாயாக.

### இறை எல்லாம் பெற

35. அளவைக் கடந்தான்: அகிலம் கடந்தான்:
உளதத் துவத்தின் உயர்வைக் கடந்தான்:
வளமாம் நிலைமேல் வசிப்பான்பெரியோன்
உளமே அறிந்தின் புறவே வருவாய்!.

பொழிப்பு:-

விநாயகன் பிரமாண அளவைகளுக்கு அப்பாற்பட்டவன்: இவ்வுலகைக் கடந்து நின்றவன்: முப்பத்தாறு தத்துவங்களின் உச்சியில் நின்று கடந்து நிற்பவன். அத்தகையவன் என் மனமாகிய இருப்பிடத்தை அறிந்து நான் இன்புறும்படி வரவேண்டும்.

### படித்தோர் துன்பம் நீங்க

36. கத்தும் தரங்கக் கடல்சூழ் புவியில்
தித்தித் திடும்செந் தமிழ்மா லைசெயும்
வித்தர் களின்தீ வினையை விலக்கும்
அத்தித் தலையன் அருட்பார் வையதே!.

பொழிப்பு:-

கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தில், இனிமையான செந்தமிழால் பாமாலை புனையும் கவிஞர்களின் தீவினைகளை எல்லாம் யானை முகத்தவன் அருட்பார்வை நீக்கிவிடும்.

### நல்ல கவி பாட

37. ஆரா அமுதம் எனஆ சுகவி
சீராப் புகலும் திறமே அருள்வாய்!
தீராக் கலைகள் திகழ்வா ரிதியே!
வாராய்! வளமே வளர்வா ரணனே!.

பொழிப்பு:-

வளமெல்லாம் அளிக்கும் யானை வடிவானவனே! முடிவில்லாத கலைகளால் நிறைந்த கடலே! தெவிட்டாத அமுதம் போன்று ஆசு கவிகளை உன் புகழுக்காக நான் பாடும் ஆற்றலை அருள்வாய்!.

### விநாயகனைக் கண்டு மகிழ

38. வேதா கமமே மிகவும் புகழும்
பாதாம் புயனே! பணிசெய் அடியேற்(கு)
ஆதா ர!நின(து) அருட்காட் சிதர
வாதா எழில் 'ஓ' வடிவா னவனே!.

பொழிப்பு:-

வேதங்களும், ஆகமங்களும் புகழும் திருவடிகளை உடையவனே! தொண்டு செய்பவர்களுக்கு ஆதாரமானவனே! அழகான ஓங்கார வடிவானவனே! உனது அருட்காட்சியை எனக்காக வந்து தருவாயாக!.

### விநாயகனின் அருளைப் பெற

39. உம்பர் புகழும் உறுதிப் பொருளே!
தும்பிச் சிரனே! தொழுதேன்: தொழுதேன்:
நம்பும் எனைநீ நழுவ விடாமல்
அம்பொன் கரத்தாய் எனைஆண்(டு) அருளே!.

பொழிப்பு:-

தேவர்களெல்லாம் புகழ்ந்து பேசும் உறுதிப் பொருளே! யானை வடிவானவனே! உன்னைத் தொழுதேன். உன்னையே நம்பும் என்னைக் கைவிட்டு விடாமல் உன் அழகிய பொற்கரத்தால் ஆண்டு கொண்டு அருளுவாய்!.

### குறை தீர

40. கவிஞன் புகலும் கவின்ஆர் தமிழ்உன்
செவிஏ றியும்நீ திருகல் சரியோ?
புவிதான் புகழும் புழைக்கைய!கரம்
குவிவேன்: மகிழ்வேன்: குறைதீர்த்தருளே!.

பொழிப்பு:-

கவிஞர்களால் புகழ்ந்து பேசப்படும் அழகிய தமிழ்ப் பாக்கள் உன் செவிகளில் விழுந்தும் நீ அருளாமல் இருப்பது சரியாகுமோ? உலகத்தார் புகழும் தும்பிக்கையை உடையவனே! என் இரண்டு கைகளையும் குவித்தேன்: அதனால் மகிழ்ந்தேன்: என் குறைகளைத் தீர்த்தருளுவாயாக!.

### அருள் மழையில் நனைய

41. மங்கை வலவை மணவா என்அருள்
பொங்கும் புனல்போல் பொழிந்தே புவனம்
எங்கும் நிறைந்தே இருக்கின் றதுகண்!
துங்கக் குணத்தீர் புசிமின் தொழுதே!.

பொழிப்பு:-

வல்லபையின் கணவனாகிய விநாயகனின் அருள் பொங்கி வெள்ளம் போல் இவ்வுலகமெல்லாம் நிறைந்து காணப்படுகின்றது. விநாயகனின் குணங்களைப் பாடுபவர்களே! அவன் கருணை வெள்ளத்தை வழிபட்டு அனுபவியுங்கள்.

### ஆணவம் அகல

42. மூல மலவா தனைதீர் முதல்வா!
சீல செழும்செம் சடையன் சிவனார்
பால! உயர்தற் பரனே! அருள்தா!
கோலம் மிளிரும் குணமார் பொருளே!.

பொழிப்பு:-

மூல மலமாகிய ஆணவ மலத்தைத் தீர்க்கும் முதல்வனே! அற வடிவான சிவபெருமானுடைய மைந்தனே! உயர்ந்த பரம் பொருளே! அழகொளி வீசும் குணங்களால் நிறைந்த பொருளே! அருள் தருவாயாக!.

### *பக்குவம் பெற*

43. சித்தி தரும்சத் திநிபா தமதே
எத்தி னமதில் எனைவந்(து) உறுமோ?
அத்தி முகவா! அருமைத் தலைவா!
சத்தி தனையா! தமியற்கு உரையே!.

பொழிப்பு:-

யானை முகத்தவனே! பெருமை மிக்க தலைவா! பராசக்தியின் மைந்தனே! பக்குவ ஆன்மாக்களிடம் திருவருள் பற்றுவதாகிய தன்மை எந்த நேரத்தில் என்னிடம் வந்து சேருமோ? எனக்கு சக்திபாதம் வாய்க்கும் நாளை உரைப்பாயாக.

### *துயரம் நீங்க*

**44. முதல்வா படவே முடியா(து) இனிநோ**
**இதமே அருளா(து) இருத்தல் எனை? பொற்**
**பதமே உடையாய்! பணிந்தேன்! பரையின்**
**புதல்வா அருளாய்! புரைதீர்ப் பவனே!.**

பொழிப்பு:-

பொற்பாதங்களை உடையவனே! பராசக்தியின் மைந்தனே! அருவாய்! குற்றங்களைத் தீர்ப்பவனே! தலைவா! என்னால் இனித் துன்பப்பட இயலாது. என்ன காரணத்தினால் எனக்கு இன்னமும் அருள் புரியாமல் இருக்கிறாய்?.

### *பேரருள் பெற*

**45. சீலன் துதிக்கைச் சிரனை அனவே**
**ஞாலத் தினிலே நலம்ஈ வர்எவர்?**
**கோலச் சிகிவா கனனாம் குகனும்**
**சாலப் புகழும் தனிமன் அவனே!.**

பொழிப்பு:-

யானை முகத்தனைப் போல உலகத்தில் இனி நன்மைகளை அருளுபவர் யார் உள்ளார்கள்? மயில் வாகனனாகிய முருகனாலும் மிகவும் ஒப்பற்ற தலைவன் விநாயகனே ஆவான்.

### *கவலைகள் ஒழிய*

46. திண்தோள் சதுரும், திகழ்ஐங் கரமும்,
வண்டார் குழலார் மகிழ்ந்தே மருங்கில்
பண்டே வளர்கோ லமதைப் பணிவாய்க்
கண்டேன்: களித்தேன்: கவலை இலனே!.

பொழிப்பு:-

திண்மையான நான்கு தோள்களையும், ஐந்து கரங்களையும், இரண்டு பக்கங்களிலும் சித்தி புத்தியாகிய தேவிமார் இருவரையும் பெற்ற விநாயகனுடைய அழகிய கோலத்தைக் கண்டேன்: மகிழ்ந்தேன்: கவலைகள் எல்லாம் என்னை விட்டு நீங்கி விட்டன.

### *ஞானம் பெற*

47. மோன நிலையில் முழுசித் திபெறும்
ஞானம் தருவாய்! நலமார் பெரியோய்!
தீனன் எனைஆள் திருமன் கருணைத்
தேனம் எனவே திகழ்கின் றவனே!.

பொழிப்பு:-

அருள்நலம் மிக்க பெரியவனே! அருளாகிய கடல் போன்று திகழ்பவனே! நான் மௌனத்தில் மூழ்கி முழுமையான பரஞானம் பெற அருள்வாய்! அறிவிலியாகிய என்னை ஆள்வாயாக!.

### *பிறவி அச்சம் நீங்க*

48. அச்சம் விடுத்தேன் அரனார் முதலோர்
மெச்சும் படியாய் மிளிர்ஐங் கர! நின்
பச்சைத் தளிராம் பதமே பலமாய்
இச்சை யுடனே பிடித்தேன் இதமே!.

பொழிப்பு:-

சிவன் முதலானவர்கள் புகழும் ஐந்து கரத்தை உடையவனே! உன்னுடைய தளிர் போன்ற திருவடிகளை விருப்பத்துடன் பிடித்துக் கொண்டேன். அதனால் பிறவி அச்சத்தை விட்டேன்.

### சகல சித்திகளும் பெற

49. பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார்;
முக்தி பெறுவார்; முதன்மை உறுவார்;
சித்தி அடைவார்; திடமே! திடமே!.

பொழிப்பு:-

பக்தி மார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் யானை முக விநாயகனின் திருவடிகளில் பணிவார்கள். அதனால் முக்தியைப் பெறுவார்கள். எண் வகைச் சித்திகளையும் பெறுவார்கள். இது உறுதி.

### புகழைப் பெறுவதற்கு

50. தாதா சரணம், சரணம் தளிர்த்தாள்
நீதா சரணம் சரணம்; நிகர்இல்
வேதா தரனே சரணம்; மிளிர்ஐம்
பூதா சரணம்! புகழ்நாற் புயனே!.

பொழிப்பு:-

தலைவனே! வேதங்களின் பொருளாக விளங்குபவனே! ஐம்பூதங்களானவனே! நான்கு தோள்களை உடையவனே! விநாயகனே! உனது தளிர் போன்ற பாதங்களை நான் சரணடைவதற்கு தந்தருள்வாயாக.

### உலகம் வாழ

51. ஊழி முதல்வன் உயர்வே ழமுகன்
வாழி! திருசத் திகளும் அணியாம்
வாழி! கவினார் வாச மலர்த்தாள்
வாழி! அடியார் வளம்வா ழியவே!.

பொழிப்பு:-

உலகத்திற்கு முதல்வனான யானை முகன் வாழ்க! சித்தி, புத்தி தேவிகள் வாழ்க! அழகு நிறை அவனுடைய மலர்ப் பாதங்கள் வாழ்க! அடியார்கள் செல்வங்கள் பல பெற்று வாழ்க!.

# திருப்புகழ்

பக்கரைவி சித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்

திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்

மிக்கஅடி சிற்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனு மருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே.



தோற்றம்
18.01.1906

மறைவு
12.02.1976

மிருசுவில் வடக்கு

# அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின்

தேகவியோகம் குறித்துப் பாடியது.

உ

சிவமயம்

மிருசுவில் வடக்கு

# திரு வே. சின்னத்தம்பி அவர்களின்

தேகவியோகங் குறித்துப் பாடியது

## வெண்பா

ஆன ராட்சத வருட மணு குந்தை மாதமதில்
ஊனமிலா முற்பக்கத் துவாதசியாம் - ஆனதினம்
உற்ற வாதிரையிற் சின்னத்தம்பி யென்போனே
பெற்றான் சிவபதத்தின் பேறு.

## விருத்தம்

பாரிலுறுந் தருமமெலாம் வந்தொன்றாகிப்
பண்பான வோர் வடிவமாகி யுற்றோன்
தீரமொடு மில்லறத்தை யாற்றுமாற்றாற்
திகழ்ந்த சின்னப்பிள்ளையெனுங் கற்பின்மிக்காள்
நேரில்மடமாது தனைத்துணையாய்க் கொண்டு
நல்லறமாய் வாழ்வுதனை நடத்துந்நாளிற்
சேரவரும் புதல்வரொடு புதல்விமாருஞ்
செவ்வேழ்தன் முகங்களைப்போற் தோன்றினாரே
அரசாங்க சேவை தனிலிகிதனாகி
அமர்ந்திடுவோன் கணேசனெனுந் தொல்லோன்மற்றும்
தரமான கனகசபை யுற்றசோம
சுந்தரமாங் கற்பகம்மாவுடனே வந்த
திருவாழும் மாதசலாம்பிகையும் பீதாம்
பரமானோர் சேயவராய்த்தந்து கோயிற்
பரிவோடுங் கணபதியைக் கதிர்காமத்தைப்
பகர்ந்த சிதம்பர தலத்தைச் சேவித்துள்ளோன்

இப்படியாயுறு தவத்தின் வித்தாய்நண்ணி
உலகமெனும் மாயை விட்டுச்சிவத்தின் பேற்றைத்
தப்பறவே சேர்ந்தனையோ வையாவென்று
சேயவரும் மனையாமுஞ் சுற்றத்தோடும்
ஒப்புடனே கதறியழுதேங்கிக் கையால்
ஓயாது மார்படித்துக் கொண்டு சோர
எப்படியு மவர்களைநீ தேற்றாவண்ணம்
ஏகினையே யினியுனை நாங்காண்ப தெப்போ.

## ஆசிரியப்பா

தென்னையும் பெண்ணையுந் தேங்கியசூதமும்
துன்னிடும் பணசமுந்துகளது கதலிகள்
செந்நெற்களனியுஞ் சீர்பெறப் பொருந்தும்
பொன்னவள் வாழும் மிருசையாம் பதியில்
மேன்மையாய் வாழ்ந்த வேலுப்பிள்ளையின்
அருந்தவப் பேறாயுற்றனனோர் சுதன்
சாருஞ் சின்னத்தம்பி யென்றோதுந்
நாமமு மிட்டு நன்கு போற்றிடவே
பூரணச் சந்திரன் போல்வளர்ந்து
இலக்கண லக்கிய மெல்லாங்கற்று
புராணகா வியங்கள் பொலிந்திடுசைநூல்
எவையுமுணர்ந்தே எழில்பெறு துணைவியோ
டில்லற வாற்றில் நல்லற மாற்றி
சேய்களைத்தந்து திகழுற வைத்தே
முதுமை சேர்காலம் வந்திம்பொழுதில்
ஆலய சேவைகளாற்றி யமர்ந்து
புராண காவியங்களின் பொருள்களை விரித்து
கோயில் மடங்களெங்குமே கூறி
வந்திடுந்நாளில் வல்வினைத்தேகம்
நீங்கிடுங் காலமுந் நண்ணிடும் போது
சேயவர் மனையாள் செறிந்தவணிருக்கச்
சுற்ற மித்திரர்கள் சூழ்ந்தயல்மேவ
தெற்றெனச் சிவகதி சேர்ந்தனன்றே.

உ
சிவமயம்



மிருசுவில் வடக்கு,
குருக்கள்மாவடியைச் சேர்ந்த

அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின் துணைவியாராகிய
அமரர்

# சின்னத்தம்பி சின்னப்பிள்ளை

அவர்களின் தேகவியோகம் பற்றிய

# ஞாபகார்த்த வெளியீடு

23-02-2005

# அமரர் சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்கள்



தோற்றம்
12.05.1916

மறைவு
25.01.2005

## திதி நிர்ணயம்

சீரோங்கு தாரணத் திகழோங்கு தைத்திங்கள்
பேரோங்கு பூரணைத் திதியன்றே - காரோங்கு
மிருசுவில்வாழ் சின்னப்பிள்ளையெனும் செல்வச் சீமாட்டி
குருபரன் தாளடைந்த தினம்.

# அனுதாபச் செய்தி

அன்புள்ளவர்களிற்கு,

அமரர் சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்களின் மறைவு உத்தராயணம் தைப்பூசம் பூரணையில் நிகழ்ந்தமை அன்னாரின் புண்ணியப் பேற்றைக் காட்டிநிற்கின்றது. குடும்பத் தலைவியாகவும், பிள்ளைகளிற்கு நல்ல தாயாகவும், அயலவர்களிற்கு நல்ல நண்பியாகவும், எல்லோரோடும் இனிமையாக பழகும் சுபாவம் கொண்டவராய் நீண்ட காலம் இம் மண்ணில் வாழ்ந்த பெருமைக்குரியவர். இறைநம்பிக்கை யினூடாக விநாயக வழிபாட்டை தனித்துவமாக பேணியவர். நல்ல பிள்ளைகளைப் பெற்றெடுத்தவர். பிள்ளைகள் ஒவ்வொருவரும் பூசகர்களாகவும், புராணீகர்களாகவும் வாழ்கின்ற பெருமையை கொண்டவர். இம் அம்மையாருடைய வாழ்க்கை நம்மவர்களிற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இவருடைய மறைவு ஊரவர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் மனவேதனையைத் தந்தது. திருமதி சின்னப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீலஸ்ரீ – சுவாமிகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர்

# அனுதாப அஞ்சலிகள்

அமரர் சின்னத்தம்பிப் புலவர் சின்னப்பிள்ளை தம்பதிகள் பரம்பரை பரம்பரையாக ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா!'' என்ற நாவுக்கரசரின் தொண்டில் நீங்கா நினைவாக எந்தக் காலகட்டத்திலும் தொடர்ந்த பெருமையுடையவர்கள். அத்துடன் வன்னிமரம் ஸ்தலவிருட்சமாக அமைந்த குருக்கள் மாவடிப் பிள்ளையார் கோவில் ஈசானதிக்கில் ''புலவர் தீர்த்தம்'' அமைத்த பெருமையும் அத் தீர்த்தத்தைப் பருக தினமும் பலரும் பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றனர். வேதாரணிய பரம்பரைக் குருமார்களின் ஊர் - திருமறைக்காடு - அங்கு உறையும் விதூஷணியம்பாளுடன் உடன் காட்சியளிக்கும் ஸ்தல விருட்சம் வன்னிமரம்.

இதன் காலம் வரையறுக்க இயலாது. அதனருகில் மணிகர்ணிகைக் குளம். குருக்கள் மாவடியில் புலவர் தீர்த்தம் சாலப் பொருத்தமானது.

வழிவந்த புத்திரர்கள் இன்னும் மகேசன் தொண்டில் ஊறித்திளைத்தவர்கள். நல்லை ஆதீனத்தின் ஆணிவேர். துர்க்காபுரம் துர்க்கையம்பாளின் அடித் தொண்டன். ஏனையவர்கள் பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் போற்றும் தகைசால் மக்கள் எமக்கெல்லாம் வழிகாட்டியாக ஏன் எம்மையும் உணர வைக்கும் தகைசால் குடும்பம் என்றால் மிகையாகாது.

எல்லாம்வல்ல குருக்கள் மாவடி விநாயகப் பெருமானின் பேரருள் கிட்டுவதாக.

சாவதானமாகப் பூசை செய் உன்னைக் கைலாயம் சேர்ப்பேன் என்ற விநாயகர் துணையிருக்க பயமேன். பூரணையும் தைப்பூசமும் பொருந்திய நன்னாளில் அமரர் சின்னப்பிள்ளை பெற்ற சிவபதப் பேறே அவர் தம் புண்ணியத்தின் உச்சாணி.

பிரதம குரு,
**சிவஸ்ரீ க. சுப்பிரமணியக்குருக்கள்**
இளைப்பாறிய உள்ளூராட்சி நிர்வாகி
பொது நிறுவனங்களின் தலைவர்

குருக்கள் குடியிருப்பு,
வரணி.

# அஞ்சலியுரை

எமது அத்தியந்த நண்பரும், மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் பல சமய நிகழ்வுகளில் முன்னின்று செயல்படுபவருமாகிய திரு. சி. கணேஸ் அவர்களின் அன்னையார் அமரர் சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்கள் கடந்த ஜனவரி மாதம் இறைபதம் எய்தியதை அறிந்து கலக்கமுற்றேன். அன்னை அவர்கள் மிருசுவில் குருக்கள் மாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர்கள் தெய்வ வழிபாட்டிலும், தொண்டு செய்வதிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். அன்னையார் அவர்களுடைய தெய்வ வழிபாட்டினால் அவருடைய பிள்ளைகள் நல்ல நிலையில் இருக்கின்றார்கள்.

திரு. கணேஸ் அவர்கள் எப்பொழுதும் தெய்வ சிந்தனையோடும், சமய விஷயங்களை ஆராய்வதிலும், பல தெய்வீக ஸ்தலங்களை வழிபடுவதிலும் தமது இளைப்பாறிய காலத்தைச் செலவிடுகின்றார். யான் மாவடிப் பிள்ளையார் கோவில் குருத்துவப் பணி ஆற்றும் போது அவரை எப்போதும் ஆலயத்தில் சந்திப்பேன். அப் பழக்கத்தினால் அடியேனுடைய நெருங்கிய நண்பரானார். மேலும் நல்லை ஆதீனத்தில் சுவாமியாருடன் பல இடங்களுக்கும் சென்று வழிபாடாற்றுவார்.

''தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்''

அன்னை அவர்களுடைய ஆன்மா சாந்தியடையவும், ஏனையோர் துன்பம் நீங்கி நல்வாழ்வு வாழவும் பிரார்த்திக்கின்றேன்.

திருக்கணித நிலையம், இங்ஙனம்,
மட்டுவில், சாவகச்சேரி. ***சி. சிதம்பரநாதக்குருக்கள்***

# நினைவாஞ்சலி

# ஆத்மசாந்தி பிரார்த்தனை உரை

திருவருளும், குருவருளும், வயலும் வயல் சார்ந்த இடமும், சைவமும், தமிழும் திகழ்கின்ற இடமாக தென்மராட்சியிலே வடக்கு மிருசுவில் குருக்கள்மாவடி என்று அழைக்கப்படும் புண்ணிய கிராமத்திலே 1916-ம் ஆண்டு தாய் தந்தையர் செய்த சிவப்பேறினால் சின்னப்பு மகளாக சின்னப்பிள்ளை பிறந்தார். அவர் காலா காலத்தில் செய்த பணியினால் பிள்ளைச் செல்வங்களைப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தவர். அவருடைய மகன்மாரில் ஒருவரான திருவாளர் பீதாம்பரம் (ஈஸ்வரதாஸ்) அவர்கள் தமிழையும், புராண படனங்களையும் படிப்பதிலும், பயன் சொல்வதிலும் வல்லுநராக திகழ்ந்தார். இவர் கடந்த 1979-ம் ஆண்டு உசன் கந்தசாமி கோயிலில் கந்தபுராணத்திற்கு பயன் சொல்வதற்கு வருகை தந்தார். அன்று தொடக்கம் பல ஆண்டுகள் எங்கள் கோயிலில் ஆற்றினார். அவரின் திருமணத்தின் பின் 1985-ம் ஆண்டு தொடக்கம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். இவருடைய தாயார் கடந்த 05-01-25-ம் திகதி இறைபதம் அடைந்தார் என்பதைக் கேள்விப்பட்டு மனத்துயர் அடைந்தோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னார் தொண்டு செய்த குருக்கள் மாவடிப் பிள்ளையார் கோயிலில் வீற்றிருக்கும் விக்கினங்களை தீர்க்கும் விக்கினேஸ்வரப் பெருமானின் தாளினை இறைஞ்சி ஆன்மா சிவப்பேறு அடைய பிரார்த்தித்து கொள்கின்றேன்.

"லோக சுகினோ பவந்து"

இவ்வண்ணம்,

*சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்*

பிரதம குரு,

உசன் கந்தசுவாமி கோவில்

# அனுதாப அஞ்சலிகள்

மிருசுவிலை பிறப்பிடமாகக் கொண்ட சைவத்திரு சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அம்மையாரின் மறைவுச் செய்தி கேட்டு பெரும் அதிர்ச்சியடைந்தோம்.

அன்னை அவர்கள் விநாயகப் பெருமான் மீது மீளா அன்பு கொண்டு சைவநெறி வழுவாது வாழ்ந்து தைபூசத் திருநாளில் இறைபதம் எய்தியது இவர் வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

இவரின் மைந்தர் ஈஸ்வரதாஸ் ஐயா அவர்கள் எமது தேவஸ்தானத்தில் அம்பிகையின் அடியவராக பணிபுரிந்து புராண படனங்களுக்கு விரிவுரை ஆற்றுவது நாயகர் இல்லற வாழ்க்கைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஆகவே படைத்தவன் சித்தப்படி எல்லாம் நடக்கும் என்கின்ற கூற்றுக்கமைய துயருறும் பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறி விநாயகரும் ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளைப் பிரார்த்தித்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*வா. அகிலேஸ்வரக்குருக்கள்*
*உதவிச் சிவாச்சாரியார்*
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

துர்க்காபுரம்
தெல்லிப்பழை.

# அஞ்சலி உரை

குருக்கள்மாவடி, மிருசுவிலை வதிவிடமாகக் கொண்ட மூதாட்டி சின்னப்பிள்ளை அவர்களை யாம் கடந்த ஓரிரு தசாப்தங்களாக அறிவோம். அன்னார் 25-01-2005 அன்று இறைபதமடைந்த செய்திகேட்டு மிகவும் துயர் அடையப் பெற்றோம். சிறந்த இல்லத்தரசியாகவும் பிள்ளைகளுக்குச் சிறந்த தாயாராகவும், பேர மக்களுக்குச் சிறந்த பாட்டியாகவும் சிறப்புறத் தம் கடமைகளை ஆற்றிச் சிறந்த தமிழ்த்தாயின் பெருமைகளை நிலைநாட்டிய பெருமைக்குரிய பெருமாட்டியாவார்.

அன்னாருடன் எமக்கு அதிக பரிச்சயமில்லாவிடினும் அண்மைய காலங்களில் குருக்கள்மாவடி விநாயகர் ஆலயத்தின் குருத்துவ சேவையிற் பங்குகொண்டகாலை கண்டு அளவளாவிய சந்தர்ப்பங்கள் சிலவுண்டு. அவ்வொரு சில சந்தர்ப்பங்களிலேயே அன்னாரது விரதசீலம் பொதிந்த பண்பாட்டினைத் தெரிந்து கொண்டேன். மேலும் அவர் ஒரு சிறப்பான ஆன்மீகத் தொண்டினைக் கைக்கொண்டொழுகிய குடும்பத்தைச் சேர்ந்தவரென்பதற்கு அன்னாரது வழித் தோன்றல்களே சான்றாக மிளிர்கின்றனர். இவை மட்டுமல்லாது அன்னாரது சிரேஷ்ட புத்திரரான திருவாளர் கணேஷன் அவர்களும் ''பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்'' என்னும் முதுமொழிக்கேற்ப நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடன் உடனிருந்து அவரது திருத்தொண்டுகளுக்கு உறுதுணையாக வலம் வந்து கொண்டிருப்பதும் அக் குடும்பத்தாருடைய பண்பாட்டிற்குச் சான்றாக உளது.

"பண்டம் பெய் கூறை பழகி விழுந்தக் கால்
உண்ட அப் பெண்டிரும் மக்களும் பின் செல்லார்
கொண்ட விரதமும் ஞானமு மல்லாது
மண்டியவருடன் வழி நடவாதே" - திருமந்திரம்

என்னும் திருமந்திர மொழிக்கேற்ப துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து வீடுபேறடைய வேண்டி நம் குல தெய்வத்தைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

சுபம்

*சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்*
பிரதம குருக்கள்,
"இலஞ்சியாரணியம்"
தலைவர்,
அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை,
திருநெல்வேலி.

பாசம் என்பது சொந்த பந்தங்களில்
வேருன்றிய ஆலமரமாக இருக்க வேண்டும்.

பண்பு என்பது அன்பினையும் அறிவனையும்
கொண்ட ஒருவரிடமே ஊசலாடுகின்றது.

சொந்தமாயுள்ள சோகத்திலும் பார்க்க
பந்தமாயுள்ள சோகம் பரிணமிக்க வைப்பது.

இறைவனால் படைக்கப்பட்ட இந்த சாலையில்
இறைவனின் லீலைகளே இடம்பெறுகின்றன
மற்றவனை எதற்காக நீ வஞ்சிக்கின்றாய்

பிறப்பிற்கு முன் எப்படி இருந்தோம் என்பதுவும்,
இறப்பிற்குப் பின் எப்படி இருப்போம் என்பதுவும்
நம்மால் அறிய முடியாதவை.

# சமயத் தொண்டின் தவமணி

விநாயக நம

கிருத யுகத்தில் ஞானத்தினால் முத்தி
திரேதா யுகத்தில் தானத்தினால் முத்தி
துவாபர யுகத்தில் யாகத்தினால் முத்தி
கலி யுகத்தில் பக்தியினால் முத்தி

பத்தி சித்திகாட்டி அத்தர் சீத்தமிட்ட
பக்தருக்கு வாய்த்த பெருமாளே.

என்னும் திருப்புகழுக்கு அமைய மிருசுவில் குருக்கள் மாவடி விநாயகருக்கு பக்தியோடு தொண்டு செய்த புலவர் ஆச்சி என்று அழைக்கப்படும் சின்னப்பிள்ளை என்னும் தொண்டரால் செய்யப்பட்ட தொண்டுகள் வைகறையில் தினமும் விநாயகா என்ற ஒலியோடு திருவலகிடுதல், மெழுகுதல், மஞ்சள்நீர் தெளித்தல், திருநாவுக்கரசருடைய தொண்டு போல புல்லுகள், செடிகளை செருக்குதல் ஆகிய பணிகளோடு காலம் தோறும் பஞ்சகெளவியம் கொடுத்தல், திருநீற்றின் பெருமை அறிந்து திருநீறு தயாரித்துக் கொடுத்தல் ஆகிய தொண்டுகளை புரிந்தார். தம் மக்களையெல்லாம் சைவநெறியினின்றும் வழுவாது தெய்வ வழிபாட்டில் ஈடுபடுத்தியும், விரதங்களை காக்க வைத்தும் தீட்சா அனுட்டானங்களில் நெறிப்படுத்தியவர். சிவராத்திரி தினத்தன்று தாமரை நூலினால் செய்த திரியினால் நான்கு யாமமும் விளக்கேற்றி சோதி காணும் தன்மையர். அவ்வாறே பிள்ளைகளும் காலையில் தாய் தந்தையரை வணங்கும் இயல்புடையவர்கள். பிள்ளைகளின் சந்தேகத்துக்கிடமான வினாவுக்கு அசைவர்களும் தீட்சைக்குரிபவர்கள். தீட்சை என்பதற்கு சைவப்பிரவேசம் என்பதுதான் அர்த்தம் என்பார். அல்லாமலும் கடற் கொந்தழிப்பினால் ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு இருதினம் ஊண் உறக்கமின்றி பிரார்த்தனையில் ஈடுபட்டவர் இவர். தைப் பூசத்தன்று ஒடுக்கமடைந்த போது இந்தத் தொண்டுகளையெல்லாம் செய்ய யார் உள்ளார் என்று அஞ்சலி செலுத்தினார். விநாயகருடைய ஆசியோடு கோயில் ஊழியர்களும் அஞ்சலி செலுத்துகின்றோம்.

மிருசுவில் வடக்கு குருக்கள்மாவடிப்
பிள்ளையார் ஆலயம்

*க. சுவாமிநாதன்,*
தர்மகர்த்தா.

# நினைவு அஞ்சலி

மிருசுவில் குருக்கள் மாவடிப் பிள்ளையார் கோவில் சூழலில் வாழ்ந்து அவ் ஆலயத்தில் நித்திய வழிபாட்டுகாரர் ஆகவும், தொண்டுகள் பலவும் செய்த அமரர் சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்களின் சிவபதப்பேறு அறிந்து அஞ்சலி செய்கின்றோம்.

அன்னார் தமது கணவர் பல புராணங்களை கற்ற புராணிகராகவும், பிள்ளைகளும், மருமக்களும் புராணிகராகவும் ஆலய தொண்டு செய்பவர்களாகவும் கிடைக்கப்பெற்று ஆயிரம் மாதங்களுக்கு மேல் வாழ்ந்து சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாவடி விநாயகனை வேண்டுகின்றேன்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*சி. இராமலிங்கம்,*
முகாமையாளர்,
திருநீலகண்ட வெள்ளைமாவடி
பிள்ளையார் ஆலயம்,
மீசாலை.

# பிரார்த்தனை உரை

அமரத்துவமடைந்த அமரர் சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்களுக்கு பிரார்த்தனை உரை வழங்குவதில் திருப்தி அடைகின்றேன். சைவசீலமும் பொறுமையும் இறைவழிபாடும் மிக்கவர் இவ்வம்மையார். இவவுடைய திருமகனார் ஸ்ரீ ஈஸ்வரதாஸ் அவர்கள் எங்கள் ஆலயத்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அருட்பணி புரிந்து வருகிறார். புராண படனம் போன்ற நிகழ்ச்சிகள் ஈஸ்வரதாஸ் ஐயாவின் கீழ் செம்மையாக நடைபெறுகின்றன. சமீபத்தில் இறைபதம் அடைந்த சின்னப்பிள்ளை அம்மையாரின் மறைவையொட்டி எங்கள் தேவஸ்தானம் இரங்கல் உரையை வழங்குகிறது. அம்மையாரின் ஆத்மா இறைநிழலில் சாந்தியடையும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

என்று போற்றி அமைகின்றேன்.

***கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,***
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

# மிருசுவில் பெற்ற அன்னை சின்னப்பிள்ளை

தமிழ்ப் பண்பாடும், சைவப் பாரம்பரியமும் தழைத் தோங்கும் பனை, தென்னை, மா சோலைகளும், அழகிய வயல் நிலங்களையும் தன்னகத்தே கொண்ட வடக்கு மிருசுவில் பதியினிலே 1916-ம் ஆண்டிலே உதித்து வாழ்வாங்கு வாழ்ந்து 2005-01-25 ஆம் திகதி அமரர் அன்னை சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

உலகில் மனிதன் பிறக்கின்றான்; வாழ்கின்றான்; இறக்கின்றான்; இது உலக நியதி. சகல ஜீவராசிகளுக்கும் இது வழக்கம். ஆனால் ஆறறிவு பெற்ற மனிதன் தான் வாழும் காலத்தில் நல்லதையே செய்து, சமூகத்தை நல்வழிப் படுத்தி நற்கதி அடையும் வழிகளை எமது புராணங்கள் கூறும் வழியில் நடந்தவர் அன்னை சின்னப்பிள்ளை அவர்களாவர்.

அமரர் அவர்கள் சிறப்புற இல்லறம் நடாத்தி நன்மக்களைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். அவர் குருக்கள்மாவடி விநாயகரை நித்திய தரிசனம் செய்கின்ற விநாயகர் அடியவர். தனது வாழ்நாளில் பெரும்பகுதியை விநாயகர் ஆலயத் தொண்டில் கழித்தவர். அவரின் நீடித்த ஆயுளின் காரணம் சைவப் பாரம்பரியம், ஒழுக்கம், திருக்கோவில் வழிபாடு என்பனவே என்பது சிந்திக்கத்தக்கது.

இவரது மகன் திரு. சி. கணேசன் அவர்கள் பல்வேறு அரச திணைக்களங்களில் பிரதம எழுதுநராகக் கடமை யாற்றியவர். சிறந்த சைவப் புலமையுள்ளவர். மீசாலை பெரிய தோட்டத்தைப் புகுந்த இடமாகவும், வாழிடமாகவும் கொண்டவர். இவரது பெற்றோரின் வளர்ப்பின் காரணத்தால் அரச பணிபுரிந்த காலம் முதல் ஓய்வு பெற்றுள்ள காலம் வரை ஈழத்தின் பல்வேறு திருத்தலங்களினதும் தரிசன வாய்ப்பைப் பெற்றவர். சிறந்த வாசகர். எத்தனையோ ஆகம நூல்களை தம் வசம் வைத்திருப்பதுடன், அதன் பொருளறிந்து கற்றவர். சமஸ்கிருத சுலோகங்கள் கூட இவருக்கு அத்துப்படி.

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையாரை நித்திய தரிசன சுவாமியாக ஏற்றவர். காலையில் பூசை நேரத்தின் போது நேரம் தவறாது அவரை ஆலயத்தில் சந்திக்க முடியும். சப்பச்சிமாவடி சக்கர ஆழ்வார் ஆலயத்தின் தாபகருமாவார்.

மீசாலை, வெள்ளைமாவடிப் பிள்ளையார் வழிபடுவோர் சபையின் ஆரம்ப கர்த்தாவாக இருந்த திரு. சி. கணேசன் அவர்கள் தலைவராகவும், தற்போது உப தலைவராகவும் பணிபுரிகின்றார். நல்லை ஆதீன முதல்வருடன் மிக நெருக்கமான அடியவர். சுவாமியுடன் பல திருத்தலங்களுக்கு செல்லுகின்ற அருள் பெற்றவர். இவர் இந்நிலை பெறுவதற்கு காரணமானவர்; சக்தியூட்டியவர் இவரது அன்னையார் அமரர் சின்னப்பிள்ளை அவர்களாவர்.

''தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற்
காணப்படும்'' என்பது இதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

இத்தகைய பெருமைக்குரிய அன்னை அவர்கள் அமரத்துவமடைந்தது அவரது குடும்பத்துக்கும் அவரது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட கிராமத்துக்கும் பேரிழப்பாகும். அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல மருதடியான் திருப்பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*அ. கயிலாயபிள்ளை,*
தலைவர்,
மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப்
பிள்ளையார் கோவில் - வழிபடுவோர்
சபை சார்பாக.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
2005-01-04

# ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்

யாழ் குடாநாட்டின் தென்கீழ்ப் பகுதியாக விளங்கும் தென்மராட்சிப் பிரதேசத்தில் பல்வகை வளங்களும் நிரம்பிய மிருசுவில் கிராமத்தில் குருக்கள்மாவடி எனும் புண்ணிய இடத்தில் சின்னத்தம்பி என்பவரின் இல்லத்துணையாகி இல்லறத்தினை நல்லறமாகக் கொண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து இன்று நல்ல கதியை அடைந்திருப்பவரே அமரர் சின்னப்பிள்ளை அம்மையார்.

தற்காத்து, தற்கொண்டாற்பேணி, தகைசான்ற சொற்காத்து சோர்விலா வாழ்க்கையினை நடத்திய நல்லாளாகிய இவரை யாம் முதன்முதலாக ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டு இடம்பெயர்ந்து மீசாலையில் இவரது மூத்த மகனுடைய வீட்டில் வசித்த போதே அம் மகனாருடன் சேர்ந்து சென்று மிருசுவிலில் சந்தித்தோம்.

மலர்ந்த முகத்துடன், இன்சொல் பயின்று, உபசரித்து அளவளாவிய பண்பு இன்றும் எம் மனதில் பதிந்துள்ளது. நிறைந்த மனதும், வஞ்சகமில்லாது பழகும் கிராமியப் பண்பும், செழுங்கிளை தாங்கிய அனுபவமும் இடம்பெயரந்து சென்ற எம்மையும் ஆதரித்து அன்பு பாராட்டி உபசரிக்க மூலமாக இருந்தன என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

செல்விருந்தோம்பி, வருவிருந்து பார்த்திருக்கும் பண்புடைய நல்லாள் பெற்ற நன்மக்கட் பேறு போற்றுதற்கு உரியது.

அம்மையார் பெற்ற முதற் குழந்தைக்கு குருக்கள் மாவடி குல தெய்வத்தின் பெயரை என்றும் நினைவில் இருத்தக் கூடியதாக கணேசன் என்று பெயரிட்டனர். இப் பிள்ளையைப் பெற்ற பின் தொடர்ந்து பிள்ளைச் செல்வங்களாக வாய்த்தவர்களே சுப்பிரமணியம், ஈஸ்வரதாஸ், சோமசுந்தரம், கற்பகம்மா, அசலாம்பிகை என்போர்.

நான்கு ஆண்களையும், இரு பெண்களையும் பெற்று, வளர்த்து, ஆளாக்கி சமூகத்தில் சிறப்பாக வாழச் செய்து மகிழ்ந்தனள் ஈன்றாளாகிய அன்னை.

மூத்த பிள்ளையாகிய கணேசனை அரச சேவையில் அமரச் செய்து இல்லறத்தை சிவபாக்கியத்துடன் இனிதேயாற்ற வழிப்படுத்தினர். அவரும் பல்வேறு அரச திணைக்களங்களிலும் பணியாற்றிப் பல்வேறுபட்ட அனுபவங்களையும் பெற்று, நல்லாரிணக்கத்திலும், நற்பூசை வழிபாட்டு நெறியிலும் தளராது தடம்பதித்து வாழ்ந்து வருகின்றார்.

இரண்டாவது மகன் சுப்பிரமணியம் இ.போ.ச. சாரதியாகப் பணியாற்றி ஓய்வுபெற்று பேரப்பிள்ளைகளையும் கண்டு மனநிறைவுடன் வாழ்கின்றார்.

மூன்றாம் மகன் ஈஸ்வரதாஸ் இல்லற வாழ்வில் இனிதிழைந்து நன்மக்கட் பேறையும் பெற்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் பணி செய்யும் பேற்றினைப் பெற்றுள்ளார்.

நாலாவது மகன் சோமசுந்தரம் இல்லாளுடன் இனிதியைந்து சைவசமய பௌராணிகராகத் தொண்டாற்றித் திகழ்கின்றார்.

பெண் பிள்ளைகளுள் பெரியவராகிய கற்பகம்மா தன் துணைவனாக சிவப்பிரகாசம் எனும் சீராளனைத் துணைவனாக வரித்து நல்லாண்மக்களையும் பேரப்பிள்ளைகளையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்வதோடு பெற்ற தாயைப் பேணிப் பராமரித்து இறுதிவரை தாய்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்து பெருமை தனைப் பெற்றுள்ளார்.

இளைய புதல்வியாகிய அசலாம்பிகை மருதங்குளம் பிள்ளையார் கோவில் பூசகர் வேலாயுதம் என்பவரின் துணைவியாகி அறிவுடை நன்மக்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்கின்றார்.

மங்கலமாகிய மனைமாட்சியினைச் செவ்வனேயாற்றி அதன் நன்கலமாகிய நன்மக்கட் பேற்றினை இவ்வண்ணம் பெற்றவராகிய சின்னப்பிள்ளை அம்மையார் தான் பெற்ற பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என்றனைவரும் செய்ய வேண்டிய பணிகள் யாவற்றையும் செய்யப் பெற்ற பேறினாலும், முன்செய்த புண்ணியப் பலனாலும் தாரண வருடம் தைத் திங்கள் பன்னிரண்டாந் திகதி பௌர்ணமித் திதியும், தைப்பூச நன்னாளும் சேர்ந்து விளங்கிய புண்ணிய தினமாகிய செவ்வாய்க்கிழமை (25-01-2005) காலை 6.30 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடியை எய்தப் பெற்றார் என்பதை எண்ணி நாம் அனைவரும் தெய்வத் திருவருளைப் போற்றுவோமாக.

அன்னாரின் ஆத்மா ஆடவல்லான் அறை கழற் சிலம்படியின் கீழ் எய்தப் பெற்றமர்ந்து இன்புறப் பிரார்த்திப்போமாக.

அன்னாரின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர் யாவரும் ஆறுதல் பெற வேண்டுவோமாக.

நடலை வாழ்வு கொண்டென் செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற் பிரமாணமே
கடலின் நஞ்சமுதுண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந்தூர் முனிபண்டமே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

செயலாளர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.

சைவப்புலவர்
*மு. திருஞானசம்பந்தபிள்ளை,*
கொக்குவில்.

# இந்து சமயப் பேரவையின் இரங்கல் செய்தி

''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு''

என்ற குறட்பா மூலம் எமதுடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை வள்ளுவப் பெருமான் தெளிவாக்கியுள்ளார்.

புள் முதிர்வு பெற்றதென்ற கணமே முட்டையை விட்டு (பறந்து) விலகிக் கொள்ளுதல் போல உயிரும் உடம்பாரோடு கூடி வாழ்கின்றார். உடம்பைவிட்டு உயிரேகுதல் என்பதில் விதிவிலக்காகி இறந்தவர் யாருமில்லை. வாழ்கின்ற போது உலக மேம்பாட்டிற்காக ஒருவர் பிறந்து அமரத்துவம் அடையும் வரை என்ன செய்தார், என்ன செய்ய வைத்தார் என்பதே முக்கியமானதாகின்றது.

அண்மையில் அமரத்துவம் அடைந்த அம்மையார் சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அவர்களும் எமது சமயத்திற்கும், சமூகத்திற்கும் தொண்டு செய்வதற்கு தமது பிள்ளைகளை ஆக்கி அளித்துள்ளமையே எம்முள்ளங்களை நெகிழ வைப்பமைக்கான காரணங்களில் முதன்மையாகிவிடுகிறது.

இவர்களில் ஒருவர் அரச சேவையில் உயர்பதவிகள் வகித்து, இன்று தம்மை முழுமையாக ஆத்மீகப் பணியில் ஈடுபடுத்திவரும் அன்பர் திரு. சி. கணேசன். மற்றவர் பௌராணிகரான அன்பர் பீதாம்பரம். இவ்விருவருக்கும் உள்ள ஆத்மீக ஈடுபாடு அம்மையாரின் வாழ் நாளில் பிரதி பலித்திருக்கும் ஆத்மீகச் செழுமையைத் துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றது. யாழ். குடாநாட்டில் நடைபெறும் திருமுறை

முற்றோதல், புராணப் படிப்பு ஆகியவைகளில் இவ்விருவரில் ஒருவராயினும் கலந்து கொள்ளாதிருப்பது மிகவரிதாகவே உள்ளது. அவ்வகையில் இவர்கள் நால்வருக்கும் உள்ள திருமுறைப் பாராயணப் புராணபடனத் தொடர்பு அமைந்து காணப்படுகிறது.

அன்பர் கணேசன் அவர்களை ஒரு நகைச்சுவையாளனாகவே யான் எடை போட்டிருந்தேன். அது பெரும் தப்புக் கணக்கென்பதை அவரோடு பல தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்ட பின்னரே அறிந்து கொண்டேன். அன்பர் கணேசனின் வாழ்நாளில் நகைச்சுவையும் ஒரு பக்கம். ஆத்மீகம் பெரும்பக்கம் அதுவே உண்மை. எமது பொது வாழ்வில் எமக்கு ஏற்பட்ட பெருஞ் சோதனைகளின் போதெல்லாம் துணிந்து முன்னின்று அநீதிக்கெதிராக முகம் கொடுத்த பெருமக்களில் முதன்மையானவர்களில் கணேசனும் ஒருவர் என்பதை சிலர் அறியாமலும் இருக்கலாம். அதை விபரிக்கின் நீண்டுவிடும்.

இத்தகைய பல்வேறு அரிய குணநலன்கள் படைத்த புதல்வர்களை உலகுக்குத் தந்தளித்த அம்மையாரின் மறைவு எமது உள்ளங்களை ஒரு கணம் நெகிழ வைத்துவிட்டது.

அன்னாரின் மறைவால் துயருறும் அன்னார் பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவிப்பதோடு அன்னார் ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல ஞானப்பெருங்கூத்தன் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*சி. சக்திகிரீவன்*
**கௌரவ செயலாளர்**
***இந்து சமயப் பேரவை***

# உளம் நெகிழ்ந்த அனுதாபங்கள்

எமது நண்பரும் ஆசானுமாகிய சி. கணேஸ் குருக்கள்மாவடி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், பெரியதோட்டம் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்பரின் அன்னை சின்னத்தம்பி சின்னப்பிள்ளை 12-05-1916-ம் ஆண்டு மலர்ந்து 25-01-2005 தைப்பூச நன்நாளில் சிவபதமடைந்த அன்னார் குருக்கள்மாவடி விநாயகர் ஆலய நித்திய வழிபாட்டாளரும், தொண்டுசெய்பவரும் ஆவார். அந்த அன்னையின் பிரிவுத் துயரையிட்டு நண்பருக்கும், அவர் குடும்பம், சகோதரர், சகோதரிகளின் கண்ணீரையும், துயரையும் கண்டு எனது மனம் மிகவும் வேதனையுற்றது.

அந்த அன்பு அன்னையின் ஆத்ம சாந்திக்காக இன்று இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தவர்களுடன் சோகத்தில் கலந்து அந்த அன்னை ஜீவன் முத்தியின்பம் அடைய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

எனது உள்ளம் நெகிழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஊண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவ ரோஇம் மாநிலத்தே
வேண்டாம் எமக்கும் இவ்வழியேஎன
இட்டு உண்டு இரும்"

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மடம் கிழக்கு வீதி, அன்புள்ள,
சாவகச்சேரி. *ப. பாலசுப்பிரமணியம்*

## மக்களைப் பெற்ற மகராசி சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அம்மா

தற்போதைய உலகப் போக்கின் படி நாம் இருவர், நமக்கிருவர் என்னும் கொள்கையையும், அதை எல்லா நாடுகளும் கடைப்பிடித்து வருகின்றன. நாம் யாழ் மக்கள். எந்த வேளையிலும் பிள்ளைச் செல்வங்களினால் அன்றாட சாப்பாட்டிற்கு அல்லற் படவேயில்லை.

காரைக் காட்டை களனியாக்கிய பெருமகன் சின்னத்தம்பி ஐயாவிற்கு சின்னப்பிள்ளை அம்மா 10 பிள்ளைகளைப் பெற்றெடுத்துச் சீராட்டி வளர்த்துக் கொண்டு உறுதுணையாக இருந்துள்ளார்.

கோவிலை, ஆன்மீக முக்கியஸ்தர்களை தரிசிப்பது என்பது தான் உலக வழக்கம். இலங்கையிலே ஒரே ஆதீனமாக விளங்கும் நல்லூர் ஆதீன முதல்வர் இவரின் வீட்டிற்கு எழுந்தருளி ஆசிகள் வழங்கியுள்ளார். இதைப் பெருமையென்றே கொள்ள வேண்டும்.

படுத்த படுக்கையாக ஆறு மாதங்கள் இருந்த காலத்தில் அவரை திரு. கணேசனுடன் சென்று காணச் சந்தர்ப்பம் கிட்டியது. இவரின் மகள், புராணிகரின் மனைவி, ஐந்து வளர்ந்த வாலிப மக்களின் தாயாகிய கற்பக அம்மா, கணவன் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு நின்றுவிடாது, தன் தாயை முறையாக முகம் கோணாது பராமரித்த பெருமையை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த சின்னத்தம்பி சின்னப்பிள்ளை தம்பதிகள் காரைக்காட்டை களனியாக்கியது மட்டுமல்லாது சிதம்பரம் உள்ளிட்ட தென்னிந்தியத் தலங்களை தரிசித்த பெருமையும் உடையவர். தமது மூத்த மகன் கணேசுவிலிருந்து எல்லோரையும் சரஸ்வதி கடாட்சத்திற்கு உள்ளாக்கினார்கள்.

பொறுமை, பிரயாசை, கல்வியில் அவாவாக இருந்த இப் பெருந்தகையின் ஆத்மா சரியான இடத்திற்கே சென்றடையும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*இரா. கந்தையா,*

சர்வதேச வானொலி உத்தியோகத்தர்,

(கப்பல் சேவை)

ஒழுங்காளர்,

சப்பச்சி மாவடி. ஸ்ரீ சக்கர ஆழ்வார் சுவாமி கோவில்,

**தன்னைப்பற்றி ஒருவன் என்ன வகையில் சொன்னாலும் - அவன் தன்னைப் பற்றி புகழ்கிறான் என்று அர்த்தம்.**

**நட்பு என்றால்,**
**பாச பந்தங்களால் கட்டுண்ட**
**சொந்தம் போன்று இருக்க வேண்டும்.**

**இருக்கப்போகும் குறைந்த நாட்களாவது,**
**மனிதனாக வாழ்ந்து விடு.**

# "விழுதாகி நின்ற மூதாட்டி"

மிருசுவில் வடக்கு சைவ சமயத்தின் தொட்டில் போன்ற சீரோங்கு கிராமமாகும். தென்மராட்சியிலேயே தமிழால் திருமுறைகளைப் பாடி இறைவனை அர்ச்சிக்கும் சிவபூமி புராண படன மரபுகளையும் சைவ ஆசாரங்களையும் வாழையடி வாழையாகப் பேணிவருகின்ற புண்ணிய பூமியாக விளங்குவது. இப் பதியிலே சைவ மரபுகளைப் பேணுவதற்கு காலம் காலமாக பலர் தோன்றியிருக்கின்றனர். அவர்களில் ஒருவராகவே அமரர் சின்னப்பிள்ளை சின்னத்தம்பி எனும் மூதாட்டியையும் காண்கின்றோம்.

அப்பர் சுவாமிகள் போன்று சைவ பக்தியிலும் தொண்டுகளிலும் அதீத வைராக்கியம் கொண்டவராக நாம் அவரைக் கண்டுள்ளோம். குருக்கள் மாவடிப் பிள்ளையாரையே கதி என்று 60 வருடங்களுக்கு மேல் சரியைத் தொண்டுகளைச் செய்த உத்தமியாக ஔவையாரின் அவதாரமாக விளங்கி யிருக்கின்றார். இதனால் தான் விநாயகன் தைப்பூச நன்னாளில் பௌர்ணமி கூடியவேளை உஷக்காலத்திலே அவரை கைலை கூட்டிச் சென்று சிவபதமடைய வைத்துள்ளார் போலும்.

இத்தாய் தனது சைவப் பணிகளைத் தன்னுடன் மட்டும் நிறுத்தாது நல் விழுதுகளைத் தந்து அவர்களைச் சைவப் பணியாற்ற வைத்துள்ளமை போற்றுதலுக்குரியது. அந்த வகையிலே எமது ஆலயத்திலே உப தலைவராக இருந்து வரும் திரு. சி. கணேசன் அவருடைய முதல் விழுதாகும். இவருடைய அயராத தொண்டுகளால் எமது ஆலயம் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. அமரர் க. சங்கரப்பிள்ளை உபாத்தியாயருடன் சேர்ந்து சிறந்த ஒரு ஸ்கந்த யாகத்தை உலக சுபீட்சத்திற்காக 14-08-1991 புதன்கிழமை செய்து வைத்த

போது அவர் சேவையைக் கண்டு மகிழ்வுற்றோம். இன்றும் பல ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் செய்து பல அறிஞர்களையும் சைவசீலர்களையும் அழைத்து எமது ஆலயத்துடன் தொடர்பு வருவதும், கிரியைகள், விழாக்கள் இனிதே நடைபெற தொண்டாற்றி வருவதும் போற்றுதலுக் குரியன. மேலும் பல ஆலயங்களிலும் இவர் பணி தொடர்கின்றது. இவ்வாறு மக்களையும் நற்பணிக்கு ஆளாக்கிவிட்ட பெருமை தாயாரையே சேரும்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப அமரர் சி. சின்னப்பிள்ளை இருந்துள்ளார். இவ்வகையில் போற்றுதலுக்குரியவராக இருந்த மூதாட்டியின் ஆத்மா சாந்தியடைய ஆலய பரிபாலன சபை சார்பாக முருகப் பெருமானைப் பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி!

**ஆ. வேலாயுதபிள்ளை**
தலைவர்,
பரிபாலன சபை

அருள்மிகு பன்றிக் கேணி
கந்தசுவாமி கோவில்,
மீசாலை.

# செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனை உரை

தெய்வ பக்தியும் ஆசாரமும் மிக்க அன்னை சின்னப்பிள்ளை சின்னத்தம்பி அம்மையாரது பிரிவு குறித்து வேதனையடைகின்றேன். வாழ்நாள் முழுவதும் குருக்கள் மாவடிப் பிள்ளையார் திருக்கோயிலுக்கு சரீரத் தொண்டு செய்து, தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை தம் பாரம்பரிய வாழ்வில் வாழ ஆற்றுப்படுத்தியவர் இவர். இவரது பிள்ளைகளை யான் அறிவேன். எங்கள் துர்க்கை அம்பாளின் திருக்கோவிலில் பணிபுரியும் ஈஸ்வரதாசன் (பீதாம்பரம் ஐயா) அவர்களது உயர்பண்புகள் மூலம் அவரது அன்னையின் பண்பை அறிய முடிகிறது. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மும்மொழிப் பாண்டித்தியத்துடன் ஆலோசகராகப் பணிபுரியும் திரு. கணேசன் அவர்களை அறியாதவர்கள் இல்லை. திருமுறைக்கும் தெய்வத் தொண்டுக்கும் முதன்மை கொடுக்கும் குடும்பத்தை நெறிப்படுத்திய அன்னையின் ஆத்மா இறையடியில் ஆறுதல் பெறும் என்பதில் ஐயமில்லை. முப்போதும் இறைநாமம் உச்சரித்து தெய்வத் தொண்டு செய்த அம்மையார் இறையடியில் இருந்து அவரது குடும்பத்தவர்களையும் எம்மையும் ஆசீர்வதிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து அமைகிறேன்.

ஆறு. திருமுருகன்
இணைச்செயலாளர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

மிருசுவில் அன்னை சின்னப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் மறைவுச் செய்தி மிகுந்த வேதனையைத் தருகின்றது.

அன்னார் இறைபக்தி மிக்கவர். இறைவனுக்கு சரீரத் தொண்டு செய்வதில் தமது வாழ்நாளை கழித்தவர். அன்பும், அறமும் அவருடைய வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர். தம்முடைய சொல்லாலும், செயலாலும் எல்லோருடைய மனதிலும் பதிந்தவர்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தவர், சுற்றத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
07-02-2005

*சி. சிவமகாராசா,*
தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

## அருளடைந்த அன்னை

தென்மராட்சி கிழக்கில் பல்வளம் பரந்து பொலிவுற நிமிர்ந்த மிருசுவில் வடக்கில் அமைந்த குறிச்சி குருக்கள் மாவடி. குருக்கள் மாவடியில் பேரருள் வீச தானருள் கொண்டெழுந்த வீரகத்தி விநாயகரின் அருட்பெருமையால் பேறடைந்து பெருமை கொண்டது அமரர் புலவர் சின்னத்தம்பியின் குடும்பம்.

அன்னாரின் இல்லற நல்லாள் சின்னப்பிள்ளை அம்மையார்
ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றிபுனைந்த விழிமூன்றும் பெற்றதொடு தண்டைக்கால்
வாரணத்தை தன் பாதத்தின் எப்பொழுதும்
கொண்டைக் கால் வராது கூற்று" என்று விநாயகரின் அடித்தொண்டு பூண்டு இல்லறத்தை நல்லறமாக இயற்றிய அருளாளர், ஒழுக்கசீலர், வன்சொலாலன்றி இன்சொல்லால் எல்லோரையும் அரவணைத்த அன்பாளர் அன்பின் வழி பண்பாகிய சந்ததியை உருவாக்கிய உத்தமர்.

அன்னாரின் பூவுலகப் பிரிவு குடும்பத்தினருக்கும், ஏனையோர்க்கும் பேரிழப்பு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சுகினோ பவந்து சர்வ ஜன்மங்களானி பவந்து

உசன் கந்தசாமி கோவில்,
உசன், மிருசுவில்.

இங்ஙனம்,
இ. கேதீஸ்வரகுருக்கள்

## அணைந்தும் அணையாத ஜோதி

விநாயகப் பெருமானின் அருள் ஒளி வீச செந்தமிழும் சைவமும் செழிப்புற்றோங்கும் பகுதி யாழ். கண்டி வீதியிலிருந்து மிருசுவில் வடக்கு எல்லையில் அமைந்திருக்கும் இயற்கை எழில் கொஞ்சும் கிராமம் குருக்கள் மாவடியாகும்.

மலைமகளும், கலைமகளும் வீற்றிருக்கும் தாமரைத் தடாகங்கள், வெட்டை வெளிகள், தென்னை, மா, பலா தோப்புகளுடன் செந்நெல் வயல்களும் தன்னகத்தே கொண்டது.

அவ்வூரிலே சைவப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தை சேர்ந்தவரே அமரர் அம்மையார் சின்னப்பிள்ளை சின்னத்தம்பி. அவ்வன்னையை நினைவில் கொள்வதில் துன்பத்திலும் இன்பம் அடைகிறேன்.

அம்மையாரின் குடும்பம் கந்தபுராண கலாசாரத்தோடு பின்னிப்பிணைந்தது. தேவார திருவாசகப் புராணங்களை ஆலயங்கள் தோறும் பாடிப் பரப்பிய பண்பாளர். இவருடைய புலமையை அறிந்த பெரியார்கள் அவரைப் புலவர் என்றே அழைத்தனர்.

தமது பிள்ளைகளுக்கு சமய அறிவை ஊட்டியதோடு பெண் பிள்ளைகளுக்கும் சிவப் பணியில் தம்மை அர்ப்பணித்துவரும் பண்பாளர்களை மருமக்களாக்கி மகிழ்வடைந்தவர்.

குருக்கள் மாவடி விநாயகரை குலதெய்வமாகக் கொண்டு நாள்தோறும் தொண்டாற்றி எப்பொழுதும் சிவப் பொலிவோடு திகழ்பவர். கடமை உணர்வு, பொறுமை, மகிழ்ச்சியே இவரின் அணிகலன்கள். சைவம் தழைக்க வைத்த மங்கயற்கரசியே இவர். சேவையின் நிறைவால் வாழ்க்கையில் மலர்ச்சியும், நிறைவும் கண்டவர் சின்னப்பிள்ளை அம்மையார். கள்ளமற்ற எளிய வாழ்க்கை முறை, தூய்மையான தோற்றம், பக்தி நிறைந்த மனம், தன்னையே அர்ப்பணிக்கும் சீரிய குணம் இவற்றால் அனைவரையும் கவர்ந்தவர். சிறந்த தாயாகவும், சமய ரீதியில் நாம் பின்பற்றும் ஆசிரியையாகவும் திகழ்ந்தார். மன அமைதி காண வைத்த தலைவி. எளிமை அன்னாருக்கு பெருமையூட்டியது. தெய்வீக உண்மைகளை அநுபவிக்கக் காட்டித்தந்த அன்னை இன்று இல்லை. ஆனால் அவர் சந்ததி வாழையடி வாழையாய் இறைவனுடைய பாத மலரை தலைக் கொண்டு திருத்தொண்டு செய்து வருகிறது. இல்லறத்திலிருந்து நல்லறம் செய்பவர் அன்னையவர்கள். இவர் தற்காலப் பெண்களுக்கு உதாரணமாக விளங்கினார்.

அன்பால் ஒருவனை மணந்து, ஒழுங்குபட்ட இல் வாழ்க்கையென்னும் இயல்பு வாழ்க்கை நடத்துவது பெண் பிறவியின் விழுமிய நோக்கமென்பதை எமக்கு எடுத்துக் காட்டி குடும்ப விளக்காய் ஒளிவீசி விண்ணகத்தோரும், மண்ணகத்தோரும் போற்றும் விநாயகப் பெருமானின் அடி சேர்ந்தார் அம்மையார் சின்னப்பிள்ளை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பூபதி வாசம்,
உசன்,
மிருசுவில்.

**வைத்திய கலாநிதி க. மாணிக்கம்**
ஓய்வுபெற்ற சுகாதாரப் பணிப்பாளர்,
வடமாநிலம்

***உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்***
***உடம்பினுள் உள்ளே உறுபொருள் கண்டேன்***
***உடம்புளே உத்தமன்கோயில் கொண்டான் என்று***
***உடம்பினை யானிருந் தோம்புகின்றேன்.***

**-திருமூலர்**

9. **காதுக்குத்தலுக்கு :**

தயிர்வளை இலையுடன் நவச்சாரம், வெண்காரம் அரைத்து பூசவும்.

10. **காதினுள் புண்ணுக்கு :**

மிளகாய் நுனியைப் பிய்த்து அதனுள் சிறிது வேப் பெண்ணை விட்டு தணலில் சூடுகாட்டி விடவும்.

11. **காதிரைச்சலுக்கு :**

தயிர்வளை இலைச்சாறும் நல்லெண்ணையும் சமன் கூட்டி காய்ச்சிய எண்ணையை காதில் இரண்டு அல்லது மூன்று துளி விட்டு தலையிலும் பூசவும்.

12. **காரணமில்லாத உடற் சோர்விற்கு :**

மிளகை நெய்யில் வறுத்து வெல்லமும் நெய்யும் சேர்த்து லேகியம் போல் செய்து காலை மாலை சுண்டங்காய் பிரமாணம் அருந்தி பால் பருகவும்.

13. **சத்திக்கு :**

விளா இலை, ஏலம், நெற்பொரி சமன் சூறணித்து முகரவும்.

14. **சகல வீக்கம் கட்டு வற்ற மருந்து :**

பெருங்காயம், சாளியா, சதகுப்பை இவற்றை கோழி முட்டை வெண்கருவில் அரைத்துப் பூசவும்.

15. **சளியுடன் கூடிய இருமலுக்கு :**

சுக்கு, மிளகு, திற்பலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், நற்சீரகம், வேப்பிலை சமஎடை எடுத்து சூறணித்து காலை மாலை தேனில் அருந்தவும்.

16. **தடிமனிற்கு :**

உலர்ந்த மஞ்சளை வேப்பெண்ணையில் தோய்த்து எரித்து புகையை நுகரவும்.

**17. தொண்டை நோவிற்கு :**

நவச்சாரத்தை முட்டை வெண்கருவில் அரைத்து நோ உள்ள இடத்தில் பூச மாறும்.

**18. நாட்பட்ட நோவிற்கு :**

மிளகாய்ப் பழத்தின் நுனியைப் பிய்த்து சாராயத்தினுள் இட்டு மூடி நாற்பது நாள் சென்றபின் எடுத்து பத்துப் போட குணமாகும்.

**19. நெஞ்சு நோவிற்கு :**

கோழிமுட்டை, சாராயம், எலுமிச்சம்புளி, வெந்நீர், கற்கண்டு சேர்த்துக் கலக்கி காலையில் மாத்திரம் குடிக்கவும்.

**20. பற்புழுவுக்கு :**

வேர்க்கொம்பு, வெள்ளுள்ளி, வேப்பம் நெட்டு, சுண்டங் கத்திரிக்காய்ப்பழம், வேர், வேப்பம்பட்டை, பூவரசம் பட்டை சமன் கூட்டி கசாயித்து நன்கு வற்றியபின் வாய் கொப்பழிக்கவும்.

**21. பல்வலிக்கு :**

அவுரிச்செடி மூலத்தை கசாயித்து வாய் கொப்பழிக்கப் பல்வலி தீரும்.

**22. பல் நோய்க்கு :**

சுக்கு, கடுக்காய், நாயுருவி வேர்ப்பட்டை இவை சமன் கூட்டி வறுத்து பொடித்து பல்லில் தேய்க்க பல்நோய், பல் அசைவு நீங்கி பல் உறுதி பெறும்.

**23. பேன் சாக :**

I படிகாரத்தை தூள் செய்து நீரில் கலந்து தலையில் பூசி மூன்று மணி நேரத்தின்பின் ஸ்நானம் செய்யவும்.

II கருஞ்சீரகத்தை தேசிப்புளியில் அரைத்து தலைக்கு தடவி முழுகவும்.

**24. உண்நாக்கு வளர்ந்து இருமினால் :**

நவச்சாரத்தை பொடியாக்கி நான்கு அல்லது ஐந்து முறை உண்நாக்கில் தடவ சுகம் வரும்.

**25. குதிக்கால் வேதனைக்கு :**

கற்பூரம் 50 கிராம், நல்லெண்ணை காற் போத்தல், சாராயம் காற் போத்தல் ஒன்று சேர்த்து அரைத்துப் பூசவும்.

**26. ஒரு தலைக்குத்து :**

I குருவித்தலைப் பாகல் இலை பிழிந்து எதிர் மூக்கில் சிறுதுளி காலையில் விடவும்.

II எலுமிச்சம் பழத்தை சுட்டு சாறு பிழிந்து அதில் சுக்கு, மிளகு, திற்பலி கூட்டி அரைத்து நெற்றியிலும் உச்சியிலும் பூசவும்.

**27. மார்பில் ஏற்படும் நோ ~ குத்திற்கு :**

கராம்பு, கற்பூரம், சமன் கூட்டி வெற்றிலைச் சாற்றில் அரைத்துப் பூசவும்.

**28. முகப் பருவிற்கு :**

கையாந்தகரைச்சாறு காற் போத்தல், மஞ்சள்த் தூள் ஒரு தேக்கரண்டி, நல்லெண்ணெய் காற் போத்தல் காய்ச்சி முகத்தில் பூசி குளிர்ந்த நீரில் கழுவவும். சிறிது சந்தணமும், மிளகும், சாதிக்காயும் சேர்த்து அரைத்து ஒரு வாரம் தொடர்ந்து முகத்தில் பூசி வந்தால் முகப்பரு நீங்கும்.

அவரை இலைச் சாற்றை தினமும் காலையில் முகத்துக்கு தடவி வர முகத் தழும்புகள் மறைந்து போய் விடும்.

**29. வயிற்றுக் கடுப்பிற்கு :**

தேங்காய்ப்பாலில் சர்க்கரை கூட்டி கொடுக்கவும்.

**30. வயிற்றுக் குத்துக்கு :**

இளநீரை மூன்றில் ஒன்றாக வற்ற வைத்து ஓமமும் நெற்பொரியும் தூள் செய்து போட்டுக் குடிக்க தீராத வயிற்றுக் குத்தும் தீரும்.

31. மூலத்தின் முனை கரைய :

வேப்பங்கொட்டையின் பருப்பை எடுத்து 100 கிராம் நன்றாகப் பட்டுப்போல் அரைத்து ஓர் இலையில் தட்டையாக தட்டி, மூலமுளை உள்ள ஆசன வாயில் வைத்துக் கட்டி விடவும், மூன்று நாட்கள் தொடர்ந்து துயில் வதற்குமுன் கட்டி காலையில் அகற்றி வர மூலமுளை கரைந்து விடும். உபத்திரமும் மறையும்.

32. முகத்தில் வெண்ணெய் வடிகிறதா?

நீராவியில் முகத்தைக் காட்டி சுத்தம் செய்வது பலனளிக்கும். அடிக்கடி குளிர்ந்த நீரால் முகத்தை சுத்தம் செய்ய வேண்டும்.

33. உள்நாக்கு நீண்டிருந்தால் :

வெள்ளைப் பூண்டை நசுக்கி சற்று எடுத்து அதை ஒரு விரலில் தொட்டு உள் நாக்கின் மேல் தடவி வர உள் நாக்கு குணமாகும்.

34. பேன்களை ஒழிக்க :

இரவில் தலையணையில் வேப்பிலை, துளசி இவற்றை பரப்பி வைத்துக் கொண்டு படுத்தால் பேனை ஓரளவு குறைக்கலாம். பேனை முற்றாக ஒழிக்க கடலைப் பருப்பு 2 ஸ்பூன், வெட்டிவேர் ஒரு ஸ்பூன், சிறிய தேங்காய்த் துண்டு, 5, 6 பூண்டுத் துண்டங்கள், சிறிதளவு வெந்தயம் முதலியவற்றை அரைத்து கூந்தலை அலச பேன் முற்றாக ஒழிந்து விடும்.

35. கை வைத்தியம் :

புளியம்பூவை அரைத்து கண்களுக்கு பற்றுப்போட்டால் கண் வலி நீங்கும். சிவப்பும் குறையும்.

உடம்பில் வீக்கம் ஏற்பட்டால் மல்லிகைப்பூவை அரைத்துக் கட்டினால் வீக்கம் வடிந்து குணமாகும்.


வாழைப்பூச்சாறு இரத்த மூலத்திற்குச் சிறந்தது.

மலச்சிக்கல் சரியாக தினமும் இரவில் பப்பாசிப்பழம் சாப்பிட மலச்சிக்கல் சரியாகும்.

# கர்ப்ப காலக் கலண்டர்

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | நவம்பர் |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
| பெப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | டிசம்பர் |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | |
| மார்ச் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | பெப்ரவரி |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச் |
| பெப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| மார்ச் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 7 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
| ஆகஸ்ட் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூன் |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூலை |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்ட் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஆகஸ்ட் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |

# வம்சாவழி


சின்னத்தம்பி
+
சின்னப்பிள்ளை
கணேசன்
+
சிவபாக்கியம்
முகுந்தன்
(அமரர்)
சுப்பிரமணியம்
+
மனோன்மணி
சிவகடாட்சம்
+
தங்கேஸ்வரி
சிவகுமார்
+
ரூபி
சிவகௌரி
+
சிவபாலன்
லக்சிகன்
ஈஸ்வரதாசன்
+
ஜெகத்ஜெனனி
தேன்மொழி
சோமசுந்தரம்
+
சின்னம்மா
கற்பகம்மை
+
சிவப்பிரகாசம்
சிவலோகநாதன் + லதா
யோகேஸ்வரநாதன்
ஞானசொரூபன்
சரவணபவன்
சிகதரன்
துவாரகன்
சதுர்சன்
ரஞ்சிதா
அசலாம்பிகை
+
வேலாயுதம்
கிரிசாம்பாள்
இமயவல்லி
வானதி

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் சின்னத்தம்பி சின்னப்பிள்ளை அம்மையார்**

அவர்கள் கடந்த 25 – 01 – 2005 செவ்வாய்க்கிழமை அன்று எம்மையெல்லாம் விட்டு இவ்வுலக வாழ்வை நீத்து சிவபதம் எய்தினார்கள். இச்செய்தி கேட்டு வருகை தந்து ஆறுதல் வார்த்தை கூறிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கட்கும், நல்லை ஆதீனத்தினருக்கும், தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தான சமூகத்திற்கும், கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், நன்றியுடையோம். இம் மலருக்கு பிரார்த்தனை உரை, ஆத்ம சாந்தி உரை என்பவற்றைத் தந்து உதவிய வணக்கத்துக்குரிய குருக்கள் ஐயா, நல்லை ஆதீன குருமகா சந்நிதான சுவாமிகளுக்கும், சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களுக்கும், அயலவரான ஆசிரிய அன்பருக்கும் நன்றி கூறுகின்றோம்.

அமரரின் அந்தியேஷ்டி, சபிண்டி கிரியைகளில் பங்குகொண்டு மதிய போசனத்தை ஏற்று அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இம் மஞ்சரியை அச்சிட்டுத் தந்த சாவகச்சேரி திருக்கணித பதிப்பகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குருக்கள்மாவடி,<br>மிருசுவில்.<br>23 02 2005

பிள்ளைகள், மருமக்கள்,<br>பேரப்பிள்ளைகள்,<br>பூட்டப்பிள்ளைகள்

திருக்கணித பதிப்பகம் டச்சு வீதி, சாவகச்சேரி